*2*

# மார்க்கரீதியான நமது நடைமுறைகளில் ஒரு வசனப்பகுதியை நடைமுறைப்படுத்துவது எவ்வாறு

## (பகுதி 2)

*தொடங்குவதற்கு: இந்த நவீன நாட்களிலும்கூட, தேவன் தமது சபைக்குக் கொண்டுள்ள வடிவமைப்பை நாம் எவ்வாறு கண்டறிகிறோம்? ஒவ்வொரு தலைமுறையும், தாங்கள் எவ்வாறு தேவனை ஆராதிக்க வேண்டும் என்று வெற்றிகரமாகத் தீர்மானிக்க முடியுமா? ஒவ்வொரு யுகத்திலும் சபையானது பின்பற்ற வேண்டிய வடிவமைப்பை புதிய ஏற்பாடு எவ்வாறு அங்கீகரிக்கிறது?*

மீளக்கட்டுவித்தல் கொள்கையை மக்கள் தழுவிக்கொள்ள ஒப்புக்கொள்ளும்போது, அவர்கள் இன்றைய நாட்களின் சபையில் உள்ள மார்க்கச் செயல்பாடுகள் யாவற்றிலும் வேதவசனங்களை நடைமுறைப்படுத்தும் அறைகூவலை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. நாம் வேதாகமத்தினால் மாத்திரமே வழிநடத்தப்பட்டிருப்பதை நோக்கங்கொண்டிருக்க வேண்டும் மற்றும் புதிய ஏற்பாட்டு சபையை அதன் சாராம்சங்களில் மீளக்கட்டுவித்தல் என்பது நமது நோக்கமாக உள்ளது; ஆனால் சபை வாழ்வின் மற்ற அம்சங்கள் பற்றி கூடுதல் கேள்விகள் எழுப்பப்பட வேண்டியுள்ளது.

இங்கு ஒரு விவரிப்பு உள்ளது: கர்த்தருடைய இராப்போஜனம் கடைப்பிடிக்கப்படுதல் பற்றி, இரு நிகழ்வுகளை மாத்திரம் நாம் புதிய ஏற்பாட்டில் கொண்டிருப்பதால் மற்றும் அவை இரண்டுமே இரவில் நிகழ்ந்ததால், சபையானது கர்த்தருடைய இராப்போஜனத்தில் இரவில் மாத்திரமே பங்கேற்க வேண்டுமா? குறிப்பிட்ட இந்தக் கேள்வியானது, ஆண்டுகளினூடே சபையைப் பிரிவினைக்கு உள்ளாக்கி இருக்கமாட்டாது என்றிருக்கையில், இதைப்போன்றவைகள் அவ்வாறு செய்திருக்கலாம். இப்படிப்பட்ட ஒரு கேள்வியானது, புறம்பான விஷயங்களில் வேதாகமத்தைப் பின்பற்றுதல் சிலவேளைகளில் எவ்வளவு கடினமாக உள்ளது என்பதை விவரிக்கிறது.

பெந்தெகொஸ்தே நாளன்று நிலைநாட்டப்பட்ட சபையின் அத்தியாவசியமான கூறுகள் மீளக்கட்டுவிக்கப்பட வேண்டும் என்று நாம் அறிகிறோம். இதற்கு நேர்மாறாக, அத்தியாவசியமற்ற சிலகூறுகள், முதல் நூற்றாண்டு சபைக்கு உரியவையாக மற்றும் தொடர்ந்து வந்த நூற்றாண்டுகளில் இருந்த சபைக்கு உரியதல்லாதவையாக இருந்ததால் அல்லது அவைகள் மனித முடிவிற்கு விடப்பட்ட தற்செயலான விபரங்களின் வகையைச் சார்ந்தவையாக இருந்ததால், அவைகள் மீளக்கட்டுவிக்கப்பட தேவையற்றவைகளாக உள்ளன.

இந்தப் பாடம், புதிய ஏற்பாட்டு சபையில் உள்ள எந்த விஷயம் இன்றைய நாட்களில் சபையைக் கட்டுப்படுத்துவதாக உள்ளது என்பதை எவ்வாறு தீர்மானிப்பது என்பது பற்றிய வழிகாட்டுக் குறிப்பை அளிக்கும். அப்படிப்பட்ட கேள்விகளின் மீது கிறிஸ்தவர்கள் கருத்து ஒருமைப்பட இயலாதபோது என்ன செய்யப்படமுடியும் என்பதற்கான வியூகங்களையும் இது முன்மொழியும்.

## இன்றைய நாட்களில் சபையைக் கட்டுப்படுத்துவது என்ன என்பதைக் கண்டறிதல்

இன்றைய நாட்களில் சபையின்மீது புதிய ஏற்பாட்டின் எந்த செயல்முறைகள் கட்டுப்பாட்டை விதிக்கின்றன என்பதை நாம் எவ்வாறு கண்டறிய முடியும்?

### மூன்று வழிகள்

சபையின் செயல்முறைகள் பற்றி மூன்றுவழிகளில் புதிய ஏற்பாடு போதிக்கிறது அல்லது அங்கீகரிக்கிறது என்பது இந்தக் கேள்விக்கான மிகவும் நியாயமான பதிலாக உள்ளது: கட்டளையினால், உதாரணத்தினால் மற்றும் தேவையான உய்த்துணருதலினால். இந்த வழிகள் ஒவ்வொன்றையும் கண்ணோக்குவோமாக.

*நேரடியான கட்டளை:* சிலவேளைகளில் முதல்நூற்றாண்டு சபைக்கு நேரடியான கட்டளைகள் தரப்பட்டன. வேறுவகையில் நம்புவதற்கு நல்ல காரணம் இல்லாதவரையில், முதல் நூற்றாண்டில் சபைக்குத் தரப்பட்ட ஒரு கட்டளை, இன்றைய நாட்களின் சபைக்கும் நடைமுறைப்படுவதாக உள்ளது.

புதிய ஏற்பாட்டில் காணப்படும் சில கட்டளைகள் எல்லாக் காலத்திற்கும் எல்லாருக்கும் நடைமுறைப்படுவதை நோக்கங் கொண்டிருக்கவில்லை என்பது தெளிவு. தீமோத்தேயுவுக்குப் பவுல், “நீ இனிமேல் தண்ணீர் மாத்திரம் குடியாமல், உன் வயிற்றிற்காகவும், உனக்கு அடிக்கடி நேரிடுகிற பலவீனங்களுக்காகவும், கொஞ்சம் திராட்சரசமும் கூட்டிக்கொள்” என்று கூறினார் (கட்டளையிட்டார்) (1 தீமோத்தேயு 5:23). இந்தக் கூற்று ஒரு கட்டளையாக உள்ளது, ஆனால் இது தீமோத்தேயுவுக்கு மாத்திரம் நடைமுறைப்பட நோக்கங்கொண்டிருந்தது என்பது உறுதி. மேலும் பவுல், “ஒருவரையொருவர் பரிசுத்த முத்தத்தோடு வாழ்த்துங்கள்” என்றும் கூறினார் (ரோமர் 16:16அ). இந்தக்கூற்றும்கூட ஒரு கட்டளையாக இருக்கையில், இது இன்றைய நாட்களில் அதன் உண்மையான சொற்றொடர்களில் நமக்கு நடைமுறைப் படுவதில்லை என்பதை நம்மில் பெரும்பான்மையானவர்கள் ஒப்புக்கொள்வோம்.

*அங்கீகரிக்கப்பட்ட உதாரணம்.* சிலவேளைகளில் புதிய ஏற்பாடு உதாரணத்தினால் போதிக்கிறது. ஏவுதல் பெற்ற வழிகாட்டுதலினால் கிறிஸ்தவர்கள் சில விஷயங்களைச் செய்தபோது, அந்த உதாரணம் பற்றியபதிவு, ஒரு தெய்வீகத்துவ "அங்கீகாரம் பெற்ற முன்மாதிரியை" நிலைநாட்டுகிறது என்று நாம் யூகிக்கிறோம். அந்த உதாரணம் பின்பு ஒரு கட்டளையாக மதிக்கப்பட்டு இருக்கிறது. இப்படிப்பட்ட விஷயங்களில், உதாரணத்திற்குப் பின்னால் ஒரு தெய்வீக கட்டளை உள்ளது என்பது தெளிவு.

அப்போஸ்தலர்களும் ஆதிக்கிறிஸ்தவர்களும் செய்தவற்றில் சில உதாரணங்கள், அதிகாரத்துவம் உள்ளவையாகவோ அல்லது கட்டுப்படுத்துபவையாகவோ எடுத்துக்கொள்ளப்பட முடியாது. கர்த்தருடைய இராப்போஜனம் ஆசரிக்கப்பட்டதாகப் புதிய ஏற்பாட்டில் வரும் இருநிகழ்வுகளில், அது இரவுவேளையில் ஆசரிக்கப்பட்டது.[1] இது அப்போஸ்தலர்கள் செய்த செயலாக இருந்ததால், நாம் இரவு வேளையில்தான் ஐக்கியவிருந்தில் பங்கேற்க வேண்டுமா? இதற்கு நாம் நிச்சயமாகவே "இல்லை" என்றுதான் பதில் அளிப்போம்.

*தேவையான உய்த்துணருதல்.* மேலும் புதிய ஏற்பாடு, தேவையான உய்த்துணருதலினால் போதிக்கிறது அல்லது அங்கீகாரம் அளிக்கிறது. சிலவேளைகளில் நேரடியான கட்டளையும் அங்கீகரிக்கப்பட்ட உதாரணமும் இருப்பதில்லை; இருந்தபோதிலும், புதிய ஏற்பாட்டு சபை செய்யவேண்டியவற்றைப் பற்றி வசனப்பகுதி கேட்டுக்கொண்டது என்ன என்பதைப்பற்றி நாம் உய்த்துணருவதற்கு, வேதாகம வசனம் நம்மை வழிநடத்துகிறது. மீண்டுமாக, சரியாகப் பயன்படுத்தப்படும் தேவையான உய்த்துணருதலின் கொள்கையானது, ஆழ்ந்து சிந்திக்கப்படும் செயல்முறையின் பின்னணியில் ஏதோ ஒரு இடத்தில் ஒரு கட்டளை இருக்கிறது என்றமுடிவிற்கு வழிநடத்துகிறது.

எந்த உய்த்துணருதல்கள் ''அத்தியாவசியமானவை'' என்று உறுதிப்படுத்துதல் எப்போதுமே சுலபமாக இருப்பதில்லை. சில மார்க்கக் குழுக்களின் உறுப்பினர்கள், பிலிப்பியச் சிறையதிகாரியும் அவரது வீட்டாரும், லீதியாள் மற்றும் அவளது வீட்டாரைப் போன்றே ஞானஸ்நானம் பெற்றதைக் குறிப்பிடுகின்றனர் (நடபடிகள் 16:15, 33); "வீட்டார்" என்பதில் பச்சிளம் குழந்தைகளும் உள்ளடங்கினர் என்று அவர்கள் உய்த்துணருகின்றனர். இவ்வசனப் பகுதிகளில் அவர்கள், பச்சிளம் குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுப்பதற்கான அங்கீகாரம் உள்ளதாக அவர்கள் தவறாகக் காணுகின்றனர். இப்படிப்பட்ட ஒரு உய்த்துணருதல் "அத்தியாவசியமான" உய்த்துணருதலாக இருப்பதில்லை. பச்சிளம் குழந்தைகள் இல்லாத ''வீட்டார்'' இருந்திருக்க வேண்டும்.

"கட்டளை - உதாரணம் - அத்தியாவசியமான உய்த்துணருதல்'' என்ற மும்மடங்கு வசனவிளக்க முறைமையானது பயன்படுத்துவதற்கு எப்போதுமே எளிதாக இருப்பதில்லை, ஆனால் இது தேவன் நமக்குக் கொடுத்துள்ள முறைமையாக உள்ளது. இன்றைய நாட்களின் சபைக்கு, வேதவசனங்களை நாம் நடைமுறைப்படுத்துகையில், எல்லாக் கட்டளைகளும் பொருத்தமானவை அல்ல, எல்லா உதாரணங்களும் கட்டுப்படுத்துபவை அல்ல, எல்லா உய்த்துணருதல்களும் அத்தியாவசியமானவை அல்ல என்பதை நாம் உணர்ந்தறிய வேண்டும்.

### ஒரு நிர்ணய அளவுகோள்

“நேரடியான கட்டளை,” “அங்கீகரிக்கப்பட்ட உதாரணம்” மற்றும் “அத்தியாவசியமான உய்த்துணருதல்” ஆகியவை எப்போதுமே பயன்படுத்த சுலபமாக இராதிருக்கையில், அவைகள், இன்றைய நாட்களின் கிறிஸ்தவர்களைக் கட்டுப்படுத்தும் புதிய ஏற்பாட்டு நடைமுறையின் பின்வரும் ஒரு விஷயத்தைக் கண்டறிய நம்மைத் தெளிவாக வழிநடத்துகிறது: ஒரு நடைமுறையானது *முதல் நூற்றாண்டுக் கிறிஸ்தவர்களுக்கு விசுவாச விஷயம் என்ற வகையில் கேட்டுக்கொள்ளப்பட்டது என்றால், அதுவே இன்றைய நாட்களின் கிறிஸ்தவர்களிடமும் கேட்டுக்கொள்ளப்படுகிறது; அது விசுவாச விஷயம் என்றவகையில் கேட்டுக்கொள்ளப்படவில்லை என்றால், அது நம்மிடத்திலும் அவ்வாறு கேட்டுக்கொள்ளப்படுவது இல்லை.*

நாம், *“இந்த செயல்முறை அல்லது இந்தவசனப்பகுதி, எல்லாக் காலத்திலும் சபையிடம் கேட்டுக்கொள்ளப் படுவதன் ஒரு பகுதியைப் பிரதிபலிக்கிறதா அல்லது முன்வைக்கிறதா, அல்லது கருத்தாகத் தெரிவிக்கிறதா அல்லது விவரிக்கிறதா அல்லது உள்ளடக்குகிறதா அல்லது உருப்படுத்துகிறதா?”* என்று கேட்கமுடியும். முதல் நூற்றாண்டுக் கிறிஸ்தவர்களிடத்தில் ஒரு செயல்முறை, கேட்டுக்கொள்ளப் பட்டிருந்தது என்றால், அது நம்மிடத்திலும் கேட்டுக்கொள்ளப் படலாம் என்று நாம் கூறலாம். அவர்களிடத்தில் அது கேட்டுக்கொள்ளப்*படவில்லை* என்றால், அது நிச்சயமாகவே நம்மிடத்திலும் கேட்டுக்கொள்ளப் படுவதில்லை. இருப்பினும், குறிப்பிட்ட சில கட்டளைகள் (“காலம் கடந்த நிலையில் உள்ளது” என்பதற்கு நேர்மாறாக) “காலத்திற்குப் பொருத்தமானது” என்பதை உள்ளடக்கியிருந்தன. இப்படிப்பட்ட குறிப்பான கட்டளைகள், அவற்றிற்குப் பின்னால் நமக்கு அத்தியாவசியமாக உள்ள கொள்கையை உடையதாக இருந்தாலும், அந்தக் கட்டளை இன்றைய நாட்களில் நமக்கு நடைமுறைப் படுவதில்லை. ஆகையால் நாம், “காலம் கடந்த நிலையில் அவர்களிடம் *கேட்டுக்கொள்ளப்பட்ட புதிய உடன்படிக்கையின் அம்சங்கள்* நம்மிடத்திலும் கேட்டுக்கொள்ளப் படுகின்றன” என்று கூறலாம்.

“நேரடியான கட்டளை,” “அங்கீகரிக்கப்பட்ட உதாரணம்” மற்றும் “அத்தியாவசியமான உய்த்துணருதல்” ஆகியவற்றை அடையாளம் காணுதல் என்பது, செய்வதற்கு எப்போதுமே சுலபமாக இராதிருக்கலாம் என்பதால், இந்தப் பணிப்பொறுப்பில் நமக்கு உதவக்கூடிய கூடுதல் வழிகாட்டு குறிப்புகள் இங்கே உள்ளன.

### ஆறு வழிகாட்டு குறிப்புகள்

வேதாகம செயல்முறை ஒன்று கேட்டுக்கொள்ளப்படுகிறதா இல்லையா என்று நாம் கேட்கும்போது, வேதாகமத்திற்கு விளக்கம் அளித்தலின் மிகக்கடினமான அம்சத்தை நாம் கையாள்கிறோம். நடைமுறைப் பயன்பாட்டின் இந்த அடிவைப்பில், பின்வரும் ஆறு வழிகாட்டு குறிப்புகள் (இவை ஓரளவிற்கு மேல் இன்னொன்று கவிந்துள்ளது) நமக்கு உதவலாம்.

1. *தெளிவுத் தன்மை. இந்தப் பாடக்கருத்தின்மீது புதிய ஏற்பாடு எவ்வளவு தெளிவாக உள்ளது?* வசனப்பகுதி உண்மையில் அர்த்தப்படுத்துவது என்ன அல்லது முதல் வாசகர்களுக்கு அது அர்த்தப்படுத்தியது என்ன என்பதைப் பற்றி நாம் நிச்சயப்படுத்திக் கொண்டவர்களாக இருக்க முடியுமா?

*தெளிவான தன்மை* என்ற கருத்தின் தொடர்பாக, இந்தக் கேள்விகள் கேட்கப்படலாம்: (அ) இந்தப் பாடக்கருத்தின் மீதுள்ள வேதாகமக் கருத்துப்பொருள்கள் எவ்வளவு? (ஆ) இவ்வசனப் பகுதிக்கு நாம் தரும் விளக்கம் தனித்தன்மை வாய்ந்த விளக்கமாக உள்ளதா? ''இவ்வசனப் பகுதியில் உள்ள சத்தியத்தைக் கண்டறிவதில் நான் மட்டும் [அல்லது நான் உள்ள குழுமட்டும்] தனித்துள்ளதா?'' என்று நம்மையே நாம் கேட்க வேண்டும். (இ) இந்த விளக்கவுரை, யூகங்கள் அல்லது மனிதரால் ஏற்படுத்தப்பட்ட வகைப்பாடுகள் அல்லது பிரிவுகளின் அடிப்படையில் உள்ளதா?

2. *சீரான தன்மை. இந்த நடைமுறையானது, முதல் நூற்றாண்டுக் கிறிஸ்தவர்களால் சீராகச் செயல்படுத்தப்பட்டதற்குச் சுட்டிக்காட்டுதல் ஏதேனும் உள்ளதா?* எடுத்துக்காட்டாக, "ஆவிக்குரிய நடத்துவத்துவத்தில் ஆண் (மாத்திரம் பங்கேற்க வேண்டும்)'' என்பது, ஆதி சபையின் கலாச்சார நடைமுறையாக மாத்திரமே இருந்தது எனவே அது இருபத்தியோராம் நூற்றாண்டில் புறக்கணிக்கப்பட வேண்டும் என்ற கண்ணோட்டத்திற்கு எதிராகப் பின்வரும் கருத்துக்கள் சுட்டிக்காண்பிக்கப்பட முடியும்: (அ) இவ்விஷயமானது, முக்கியமான இறையியல்ரீதியான மறைவான கருத்துக்களைக் கொண்டுள்ளது (1 கொரிந்தியர் 14:34; 1 தீமோத்தேயு 2:13, 14) மற்றும் (ஆ) இது பழைய ஏற்பாட்டில் மாத்திரம் அல்ல, ஆனால் புதிய ஏற்பாட்டில் "பரிசுத்தவான்களுடைய சபைகளெல்லாவற்றிலேயும்'' (1 கொரிந்தியர் 14:33, 34) கூட சீரான நடைமுறையாக இருந்தது.

3. *அத்தியாவசியம். சபைக்கு அத்தியாவசியமாக இருந்து, முதல் நூற்றாண்டுக் கிறிஸ்தவர்களிடம் கேட்டுக்கொள்ளப்பட்ட சில விஷயம் பற்றிய குறிப்பை இவ்வசனப் பகுதி அல்லது செயல்முறை உள்ளடக்குகிறதா?* "செய்ய வேண்டும்'' என்பது மறைவாகக் குறிப்பிடப்பட்டுள்ளதா அல்லது உரைக்கப்பட்டுள்ளதா? (காண்க நடபடிகள் 5:29.) அந்த செயல்முறை எவ்வளவு பரவலாகப் பரவியிருந்தது? அது ஒரு (உள்ளூர்) சபை தொடர்பாக மாத்திரம் பேசப்பட்டுள்ளதா, அது சகோதரத்துவம் முழுவதற்கும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளதா? சந்தேகத்திற்கு இடமற்ற வகையில் அத்தியாவசியத்தின் விஷயமான சிலவற்றை அது உள்ளடக்கி இருக்கிறதா? அது - சபைக்கட்டிடம் போன்ற - சூழ்நிலைக்கு ஏற்ப முடிவு செய்யும் விஷயமாக இருந்தது என்றால், அதைப் பற்றி நாம் சட்டங்கள் ஏற்படுத்த வேண்டுமா? கேள்வியில் உள்ள செய்முறையானது அடையாளத்துவம் ஒன்றைக் கொண்டுள்ளதா அல்லது இறையியல்ரீதியான தனிக்குறிப்பைக் கொண்டுள்ளதா? அது மேம்பாக்காக மாத்திரம் இருப்பதைக் காட்டிலும் அதிக ஆழமாக தனிசிறப்பு ஒன்றைக் கொண்டுள்ளதா?

4. *உலகளாவிய தன்மை. கவனத்தில் உள்ள விஷயம், எல்லாக் காலத்திற்குமான உலகளாவிய வகையில் கேட்டுக்கொள்ளப்படுவதாக இருந்தது என்பதற்குச் சில குறிப்புகள் உள்ளனவா அல்லது அதற்கு நேர்மாறாக, வசனப்பகுதியின் சந்தர்ப்பப் பொருளில், கலாச்சார ரீதியான சில விஷயங்கள் உள்ளடங்கி இருந்ததைச் சுட்டிக்காண்பிக்கிறதா?* எடுத்துக்காட்டாக, 1 கொரிந்தியர் 11ல் பெண்கள் முக்காடு இட்டுக்கொள்ள வேண்டும் என்பது கலாச்சாரத்துடன் தொடர்புடையதாகத் தோன்றுகிறது, ஏனெனில் பெண் முக்காடு இட்டுக்கொள்ளத் தவறுதல் என்பது அவள் தனது

கணவரின் அதிகாரத்திற்குக் கீழ்ப்படிய மறுத்தலின் அடையாளம் என்று உணர்ந்தறியப்பட்டது.

வசனப்பகுதியானது அப்போதய கலாச்சாரத்தை உள்ளடக்குகிறது என்பதற்கு 1 கொரிந்தியர் 11:6ம் வசனம் சாட்சியாக உள்ளது. அங்கு பவுல், "ஸ்திரீயானவள் முக்காடிட்டுக்கொள்ளாவிட்டால் தலைமயிரையும் கத்தரித்துப்போடக்கடவள்; தலைமயிர் கத்தரிக்கப்படுகிறதும் சிரைக்கப்படுகிறதும் ஸ்திரீக்கு *வெட்கமானால்* முக்காடிட்டுக்கொண்டிருக்கக்கடவள்" என்று கூறினார். (என்னால் வலியுறுத்தப்படுகிறது). கொரிந்து நகரின் சபை இருந்த கலாச்சாரத்தில், பெண்கள் தங்கள் தலைமுடியைக் கத்தரித்துக் கொள்ளுதல் அல்லது சிரைத்துக் கொள்ளுதல் என்பது வெட்கமாக இருந்தது என்பதை ஒவ்வொருவரும் ஒப்புக்கொண்டிருப்பார்கள். இருப்பினும் அது ஒவ்வொரு கலாச்சாரத்திலும் உண்மையாக இருக்க வேண்டும் என்பது அவசியமில்லை. பவுலின் விவாதங்கள், முதல் நூற்றாண்டில் கொரிந்து நகரில் இருந்த சபையின் சூழ்நிலைகளை அடிப்படையாகக் கொண்டிருந்ததால், குறிப்பிட்ட சூழ்நிலைகளில் பெண்கள் முக்காடு அணிய வேண்டும் என்ற குறிப்பிட்ட விதியானது உலகளாவிய வகையில் நடைமுறைப்படுவதாயிருப்பதில்லை. இருப்பினும் குறிப்பிட்ட விதியானது உலகளாவிய நடைமுறைப்படுவதாயிருப்பதில்லை. இருப்பினும் அதன் பின்னால் இருக்கும் கொள்கையானது - கிறிஸ்தவப் பெண்கள் தங்கள் சமூகம் குறிக்கும் வழியில் தங்கள் கணவரின் தலைமைத்துவத்தின் கீழ் இருக்க வேண்டும் என்ற வகையில் நடந்துகொள்ள வேண்டும் என்பது - உலகளாவிய நடைமுறைப்படுவதாக உள்ளது.

ஒரு செயல்முறையானது இயேசு திரும்பவும் வரும்வரையில் சபையின் பகுதியாக இருக்க நோக்கங் கொண்டுள்ளதா இல்லையா என்பதைத் தீர்மானிக்க முயற்சி செய்வதில், புதிய ஏற்பாட்டு யுகத்தின் காலகட்டத்திற்குப் பின்பு சபையானது அந்த செயல்முறையைத் தொடர்ந்ததா இல்லையா என்பது ஆழ்ந்த சிந்தனைக்குரிய ஒரு (ஒரே ஒரு அல்ல) விஷயமாக உள்ளது. சபையின் வரலாறு பற்றிய ஒரு படிப்பு அந்தக் கேள்விக்குப் பதில் அளிக்க உதவுகிறது.

5. *இறையியல். செயல்முறையானது முக்கியமான சில இறையியல் போதனையுடன் நெருங்கிய தொடர்புபடுத்தப்பட்டுள்ளதா?* அப்படியென்றால், அது எல்லாக் காலத்திலும் எங்கும் உள்ள கர்த்தருடைய சபைக்குழுமம் ஒவ்வொன்றிற்கும் கேட்டுக்கொள்ளப்படுவது சாத்தியமாக உள்ளது. செயல் முறையானது முக்கியமான உபதேசங்களுடன் தொடர்பற்றதாக இருந்தால், அது இன்றைய நாட்களில் கேட்டுக்கொள்ளப்படுவதாக இராதிருக்கலாம். கர்த்தருடைய இராப்போஜனம், ஞானஸ்நானம் மற்றும் ஆராதனை ஆகியவை முக்கியமானவையாக உள்ளன, ஏனென்றால் கர்த்தருடைய இராப்போஜனம் கேட்டுக் கொள்ளப்படுவதாக உள்ளது, ஞானஸ்நானம் அத்தியாவசியமானதாக உள்ளது மற்றும் ஆராதனை என்பது எப்போதுமே சபையின் மையமாக இருந்துள்ளது; தேவனுடைய மக்கள் அவரை எவ்வாறு ஆராதிக்க வேண்டும் என்று தேவன் அக்கறை கொள்வதால், ஆராதனையில் இசைக்கருவியைப் பயன்படுத்துதல் தேவனால் ஏற்றுக்கொள்ளப்படுகிறதா இல்லையா என்ற பிரச்சனையை இது உள்ளடக்குகிறது. இதற்கு மறுபுறத்தில், சபையானது ஆராதனைக்குக் கூடும் ஒரு கட்டிடத்தில் உணவு உண்பதைப் பற்றிய விஷயம் என்ன என்ற கேள்வியில் தனிச்சிறப்பான இறையியல் சத்தியம் ஏதேனும்

உள்ளதா என்று காண்பித்தல் கடினமாக இருக்கும்.

*6. கொள்கைகள். வசனப்பகுதி அல்லது நடைமுறை என்பது கொள்கைகளைக் கருத்தாகத் தெரிவிக்கிறதா அல்லது அது, முடிவுக்காலம் வரையிலும் கட்டுப்படுத்தும் கொள்கைகளினால் பாதிக்கப்பட்டு இருக்கிறதா?* உதாரணமாக, "ஒருவரையொருவர் பரிசுத்த முத்தத்தோடு வாழ்த்துங்கள்" என்ற கட்டளை (2 கொரிந்தியர் 13:12), கலாச்சார நிபந்தனைகளுடன் தொடர்புடையதாகக் காணப்படுகிறது. ஆகையால் நாம், வாழ்த்துதலுக்கு ஒருவரை ஒருவர் முத்தம் இடுதல் என்ற குறிப்பான நடைமுறையைப் பின்பற்றும்படி கேட்டுக்கொள்ளப்படுவதில்லை. இருப்பினும் இந்தக் கட்டளைக்குப் பின்னால், எப்போதும் நடைமுறைப்படக்கூடியதும் உள்ளூர் கலாச்சாரப் பழக்கங்களின் ஒவ்வொரு சபைக்குழுமத்தினாலும் செயல்படுத்த வேண்டியதுமான காலங்கடந்த கொள்கை ஒன்று இருக்கலாம்.

**இரண்டு உதாரணங்கள்**

இந்த வழிகாட்டுக் குறிப்புகளைப் புரிந்துகொள்வதற்கு நாம், பின்வரும் உதாரணங்களைப் பற்றி ஆழ்ந்து சிந்திப்போமாக.

1. *"ஒரே பாத்திரம்."* ஐக்கிய விருந்தை இயேசு ஏற்படுத்தியபோது ஒரே பாத்திரத்தைப் பயன்படுத்தியதாகப் புதிய ஏற்பாடு கூறுவதால், நாம் கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்கேற்கும்போது, ஒரே ஒரு பாத்திரத்தையே, ஒரே கலனையே பயன்படுத்த வேண்டும் என்று சபையில் உள்ள சிலர் நம்புகின்றனர். ( வேதாகமத்தில் மத்தேயு 26:27ம் வசனம், "ஒரு பாத்திரம்," அல்லது "பாத்திரம்" என்று குறிப்பிடுகிறது.) இருப்பினும், "பாத்திரம்" என்பது கலனை அல்ல ஆனால் அதில் உள்ளதையே முதன்மையாகக் குறிப்பிடுகிறது என்பது தெளிவாக உள்ளது. மற்றும், தொடக்ககால சபைகள் எல்லாம் ஒரே ஒரு கலனைப் பயன்படுத்தின என்பதற்கு ஆதாரம் எதுவும் இருப்பதில்லை. கர்த்தருடைய இராப்போஜனம் அத்தியாவசியமானதாக இருந்தாலும், ஒரே ஒரு கலனைப் பயன்படுத்துதலில் விசேஷித்த இறையியல் ரீதியான தனிச்சிறப்பு எதுவும் இருப்பதில்லை. ஆகையால் நாம், கர்த்தருடைய இராப்போஜனத்தைப் பரிமாறுவதில் பல கலன்களைப் பயன்படுத்துதல் என்பது சபையின் முடிவிற்கு விடப்பட்ட விபரமாக இருக்கிறது என்று நாம் முடிவு செய்யலாம்; ஒரு சபைக் குழுமமானது ஒன்று அல்லது ஒரு ஆயிரம் பாத்திரத்தை உபயோகிக்கலாம். இந்த இரண்டில் எந்த விஷயத்திலும், சபையின் உறுப்பினர்கள் இயேசு கட்டளையிட்ட படியே "பாத்திரத்தில்" தான் இன்னமும் பங்கேற்பவர்களாக இருப்பார்கள்.

2. *வாராந்திர ஐக்கிய விருந்து.* சபையானது ஒவ்வொரு வாரத்தின் முதல் நாளாகிய கர்த்தருடைய நாளிலும் கர்த்தருடைய இராப்போஜனத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். ஏன்? அந்தக் கேள்விக்கு இரண்டு பதில்கள் உள்ளன.

*முதலாவது, கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்கேற்க, முதல் நூற்றாண்டு சபையார் வாரத்தின் முதல் நாளில் கூடிவந்தனர் என்பதற்கு ஆதாரம்* உள்ளது. இந்த ஆதாரம் நடபடிகள் 20:7அ வசனப் பகுதியில் உள்ளடங்குகிறது: "வாரத்தின் முதல்நாளிலே, அப்பம்பிட்கும்படி சீஷர்கள் கூடிவந்திருக்கையில்." அவ்வசனப் பகுதி, கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்கேற்பதற்கு வாரத்தின் முதல் நாளில் கூடிவருதல் என்பது சபைக்கு வழக்கமாக இருந்தது என்று

சுட்டிக்காண்பிக்கிறது. மற்றும் வாராந்திர ஐக்கிய விருந்தின் அத்தியாவசியம் அந்த வசனத்தின்மீது மாத்திரம் அமைந்திருப்பதில்லை. கர்த்தருடைய இராப்போஜனத்தில் நாம் எவ்வளவு அடிக்கடி பங்கேற்க வேண்டும் என்பதைப் பற்றி ஆழ்ந்து சிந்திக்கையில், பின்வரும் உண்மைகள் யாவற்றையும் நாம் குறிப்பிட முடியும்: (அ) கர்த்தருடைய இராப்போஜனத்தை நாம் கடைப்பிடிக்க வேண்டும் என்று இயேசு கட்டளையிட்டார் (லுக்கா 22:19; 1 கொரிந்தியர் 11:24-26). (ஆ) தொடக்கால சபையார் கர்த்தருடைய இராப்போஜனத்தில் தொடர்ந்து பங்கேற்றனர் (1 கொரிந்தியர் 11; நடபடிகள் 2:42; நடபடிகள் 20:7). (இ) தொடக்ககால சபையார் வாரத்தின் முதல் நாளில் கூடிவந்தனர் (நடபடிகள் 20:7; 1 கொரிந்தியர் 16:1, 2). (ஈ) வாரத்தின் முதல் நாளில் சபை கூடிவந்தபோது, அவர்கள் கர்த்தரின் இராப்போஜனத்தில் பங்கேற்றனர் (நடபடிகள் 20:7). (உ) வாரத்தின் முதல்நாள் "கர்த்தருடைய நாள்" என்று அறியப்பட்டிருந்தது (வெளிப்படுத்தின விசேஷம் 1:10). (ஊ) அப்போஸ்தலருடைய காலத்திற்குப் பின்வந்த காலத்தில் ஆராதனைபற்றிய குறிப்புகள், தொடக்ககால சபையானது ஒவ்வொரு வாரத்தின் முதல் நாளிலும் கர்த்தருடைய பந்தியில் பங்கேற்றது என்பதைச் சுட்டிக்காண்பிக்கின்றன. ஆகையால், நடபடிகள் 20:7 என்பது, ஒவ்வொரு கர்த்தருடைய நாளிலும் முதல் நூற்றாண்டு சபை, கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்கேற்றது என்பதைச் சுட்டிக்காண்பிக்கும் ஆதாரச் சங்கிலியில் ஒரு கண்ணியாக மாத்திரமே உள்ளது.

*இரண்டாவது, வாராந்திர ஐக்கிய விருந்து என்பதில் எல்லாக்காலத்திற்கும் சபைக்கான தேவனுடைய வடிவமைப்பு உள்ளடக்கப்பட்டுள்ளது.* (அ) கர்த்தருடைய இராப்போஜனத்தைக் கடைப்பிடித்தல் என்பது அத்தியாவசியமானதாக இருந்தது. (ஆ) இந்தச் செயல்முறையின் உலகளாவிய தன்மைக்கு ஆதாரம் உள்ளது. துரோவா, கலாத்தியா மற்றும் கொரிந்து ஆகிய இடங்களில், சபைகள் யாவும் கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்கேற்பதற்காக வாரத்தின் முதல்நாளில் ஒன்றுகூடின. (இ) வாரத்தின் முதல் நாள், "கர்த்தருடைய நாள்" என்று அழைக்கப்பட்டிருந்ததால், அது ஒரு இறையியல் ரீதியான தனிச்சிறப்பைக் கொண்டிருந்தது; மரித்தோரில் இருந்து கர்த்தர், வாரத்தின் முதல்நாளில் உயிர்த்தெழுந்தபோது அவர் இந்த நாளின்மீது அந்தத் தனிச்சிறப்பைப் பொழிந்தருளினார். (ஈ) புதிய ஏற்பாட்டு சபையில் வாரந்திரம் ஐக்கிய விருந்து செயல்முறையில் இருந்தது என்பதற்கு ஆதாரம் உள்ளது.

தேவன் தமது சபை இந்த பூமியில் இருக்கும் வரையில், அதைக் கட்டுவிப்பதாக இருக்கும் கட்டளைகளைக் கொடுத்துள்ளார். சிந்தனை நிறைந்த வகையிலும் ஜெபம் நிறைந்த வகையிலும் வேதவசனங்களைப் படிப்பதாலும் ஒவ்வொரு சந்தர்ப்பப்பொருளையும் ஆழ்ந்து சிந்தித்து எடுத்துக் கொள்வதாலும் நாம், எந்தக் கட்டளைகளும் உதாரணங்களும் நாம் பின்பற்ற வேண்டியவையாக உள்ளன என்பதை அடையாளம் கண்டுகொள்ள முடியும்.

## இன்றைய நாட்களில் சபையைக் கட்டுப்படுத்துவது என்ன என்பது பற்றிய கருத்து வேற்றுமைகளைத் தீர்த்தல்

இந்த வழிகாட்டு குறிப்புகளின் அடிப்படையில் நமது விளக்கம் அளித்தல்

களை நாம் மேற்கொண்டாலும், புதிய ஏற்பாட்டில் ஒரு நடைமுறையானது எப்போது நம்மைக் கட்டுப்படுத்துகிறது மற்றும் அது எப்போது நம்மைக் கட்டுப்படுத்துவதில்லை என்று தீர்மானித்தல் கடினமானதாகவே உள்ளது. இதன் விளைவாக நாம், அத்தியாவசியமற்றவைகளுக்கு வேதவசனங்களின் நடைமுறைப்பயன்பாடு பற்றி ஏதோ ஒரு இடத்தில், கிறிஸ்தவர்கள் கருத்து வேறுபாடுவார்கள் என்பதில் நிச்சயமாயிருக்கக் கூடும். அப்போது என்ன செய்யப்பட முடியும்?

1. *கருத்து வேறுபாடு நம்மை ஊக்கம் இழக்கச் செய்யக் கூடாது.* மக்கள் பலமான உறுதிப்பாடுகளைக் கொண்டிருக்கும்போது, சில விஷயங்களின் மீது அவர்கள் கருத்து வேறுபாடு கொள்ளுதல் நிச்சயம். முதல் நூற்றாண்டில் இருந்தே கருத்து வேறுபாடு என்பது ஒரு பிரச்சனையாக இருந்துள்ளது என்பதால், இந்த பூமியின்மீது சபை இருக்கும் வரையில் அது தொடர்ந்து அக்கறைக்குரிய விஷயமாகவே இருக்கும் என்பது சாத்தியமே.

2. *சில கருத்து வேறுபாடுகளுடன் வாழ்வதற்கு நாம் கற்றுக்கொள்ள முடியும் மற்றும் அதைக் கற்றுக்கொள்ள வேண்டும்.* வேறுபாடுகள் சிலவேளைகளில் பிரிவினையை ஏற்படுத்தக் கூடாதபோது அது பிரிவினையை விளைவிக்கிறது. சகோதரர்கள் அத்தியாவசியமற்ற சில கேள்விகளின் மீது மாறுபட்ட கண்ணோட்டங்களைப் பற்றிக்கொண்டிருந்தாலும் தாங்கள் ஒன்றாக வாழவும் ஊழியம் செய்யவும் கற்றுக்கொள்ள முடியும்.

3. *நாம் கருத்து வேறுபடும்போது, நாம் தொடர்ந்து நல்ல எண்ணப்போக்குகளைக் கொண்டிருப்பது அவசியமாக உள்ளது.* (அ) நாம் எப்போதுமே அன்பாகச் செயல்பட வேண்டும். இந்த இடத்தில் நாம், "விசுவாச விஷயங்களில் ஒருமைப்பாடு; கருத்து விஷயங்களில் சுயாதீனம்; *எல்லாவற்றிலும் தயை* [அல்லது அன்பு]" என்ற சுலோகத்தின் மூன்றாவது பகுதியை நன்கு நினைவில் கொள்வோம். மேலும் நாம் "அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு" என்பதைக் குறிப்பிடும் எபேசியர் 4:15அ வசனத்தைச் சிந்தையில் காத்துக்கொள்ளவும் வேண்டும். (ஆ) நாம் அறிந்துள்ள எந்த சத்தியத்தைக் குறித்தும் நாம் தாழ்மையுடன் இருக்க வேண்டும் மற்றும் நாம் தேவனுடைய வசனத்தில் இருந்து கூடுதலான சத்தியங்களைத் தொடர்ந்து கற்றுக்கொள்பவர்களாகவும் இருக்க வேண்டும். (இ) கருத்து பற்றிய விவாதங்கள் மற்றும் கருத்து வேறுபாடுகளில், நாம் பிரதானமாக ஈடுபடக் கூடாது (காண்க 2 தீமோத்தேயு 2:24-26). (ஈ) சில வேளைகளில் சகோதரர் ஒருவருடன் உள்ள ஐக்கியத்தைத் துண்டித்துக் கொள்ளும்படி நம்மை வழிநடத்தும் சில விஷயங்கள் அவரோ அல்லது மற்றவர்களோ இழந்துபோகப்படக் காரணமாகலாம் என்பதை நாம் நினைவில் வைக்க வேண்டும்.

4. *அதுபோன்றே, நமது வேறுபாடுகளை நாம் கருத்துநோக்கில் காத்துக்கொள்வதும் அவசியமாக உள்ளது.* மற்ற கிறிஸ்தவர்கள், நாம் நம்பியிராத சிலவிஷயங்களை நம்புகின்றனர் என்ற உண்மையானது, அவர்கள் இழந்துபோகப்படுவார்கள் என்றோ அல்லது நித்தியத்திற்கும் இழந்துபோகப் படுவார்கள் என்றோ அர்த்தப்படுத்த வேண்டும் என்ற அவசியம் இல்லை. கர்த்தருடைய இராப்போஜனத்தில் சபையார் ஒரே பாத்திரத்தை மாத்திரம் பயன்படுத்துதல், "ஞாயிற்றுக் கிழமைகளில் ஆராதனையுடன் கூடுதலாக, ஞாயிறு பள்ளியை" (அல்லது வேதபாட வகுப்பை) கொண்டிராதிருத்தல்,

சபைக் கருவூலத்தில் இருந்து திக்கற்றவர்களின் இல்லங்களுக்கு உதவி அளிக்காது இருத்தல் அல்லது சபைக் கட்டிடத்தில் உணவு உண்ண மறுத்தல் என்பது பாவமாக இருப்பதில்லை. (கர்த்தருடைய இராப்போஜனத்தில் சபையார் பங்கேற்காது இருத்தல், வேதாகமத்தைப் போதிக்காது இருத்தல், திக்கற்றவர்கள் மீது அக்கறை கொள்ளாதிருத்தல் அல்லது வேதாகமத்தில் குறிப்பாகப் போதிக்கப்பட்டுள்ள மற்ற செயல்முறைகளைப் பின்பற்றாதிருத்தல் என்பவற்றிலேயே பாவம் உள்ளடங்கியிருக்கும்.) புதிய ஏற்பாடு எழுதப்பட்டுக் கொண்டிருந்த காலங்களில், மாம்சத்தை உண்ணுதல் தவறானதாக இருந்தது என்று சிலர் நினைத்ததைக் காட்டிலும் அதிகமாக, இப்படிப்பட்ட விஷயங்களைச் செய்பவர்கள் தவறானவர்களாக உள்ளனர் என்று நம்புவதும் கூட பாவமாக இருப்பதில்லை.[2]

5. *கருத்து வேறுபாடுகளைக் கையாள்வதில் நாம் வேதாகமரீதியான கொள்கைகளைப் பின்பற்ற வேண்டியவர்களாக இருக்கிறோம்.* ரோமர் 14ம் அதிகாரம் குறிப்பிட்ட வழிகாட்டு குறிப்புகளை அளிக்கிறது: கருத்து விஷயங்களில் சபைக்குள் கருத்து வேறுபாடு ஏற்படும்போது, பரஸ்பரம் ஏற்றுக் கொள்ளுதல் இருக்க வேண்டும். ரோமாபுரியில் இருந்த சபையில் “பலவீனமான” உறுப்பினர்கள் இவற்றைக் கருத்து விஷயங்களாக உணர்ந்தறியாது இருந்தனர், ஆனால் இவைகள் விசுவாச விஷயங்கள் என்று அவர்கள் நினைத்தனர். “பலவீனமான” சகோதரர், “பலமான” சகோதரரைக் குற்றந்தீர்க்காமல், அவரை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும், “பலமான” சகோதரர் “பலவீனமான” சகோதரரை அற்பமாயெண்ணாமல், அவரை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் பவுல் போதித்தார். மற்றும் சிலவேளைகளில் ஒரு நபர், இடர்பாடு அடைவதால் தவறுவதில் இருந்து அவரைக் காத்துக்கொள்வதற்காக, உரிமைநிறைந்த செயல்பாட்டில் ஈடுபடுவதற்கான தமது சுதந்தரத்தை விட்டுக்கொடுத்தாக வேண்டும் என்று ரோமர்களுக்குப் பவுல் சுட்டிக்காண்பித்தார். முடிவாக, பவுல் தவறானது என்று நாம் எண்ணுவதை செய்யக்கூடாது என்று கூறினார்.

6. *எல்லாவற்றிற்கும் மேலாக நாம், தனிப்பட்ட வகையில் சரியானவற்றையே செய்கிறோம் என்பதை நிச்சயப்படுத்திக் கொள்ள முடியும்.* உலகம் முழுவதிலும் உள்ள சபைக்காக எல்லாப் பிரச்சனைகளையும் நாம் தீர்க்க இயலாதவர்களாக இருக்கையில், தேவன் விரும்புகிறவற்றையே நாம், நமது புரிந்துகொள்ளுதலின் மிகச்சிறப்பான அளவுக்குச் செய்கிறோம் என்பதை நம்மால் நிச்சயப்படுத்திக் கொள்ள முடியும். உண்மையாக இருப்பவை என்று நாம் உறுதிப்படுத்திக் கொண்டுள்ள மற்றும் அவற்றைக் கேள்விப்படுபவர்களால் பின்பற்றப்பட்டால் அது அவர்கள் பரலோகம் செல்வதை உறுதிப்படுத்தும் என்றுள்ள விஷயங்களை நாம் பிரசங்கித்தலும் போதித்தலும் முக்கியமானதாக உள்ளது. வேதாகமத்தில் உள்ள கடினமான சில வசனப்பகுதிகளை நாம் ஒருக்காலும் புரிந்துகொள்ளவில்லை என்றாலும்கூட, சுவிசேஷத்தின் தெளிவான உண்மைகளை நாம் விசுவாசித்தால், சுவிசேஷத்தின் எளிய கட்டளைகளுக்கு நாம் கீழ்ப்படிந்தால் மற்றும் சுவிசேஷத்தின் தெளிவான வாக்குறுதிகளை நாம் ஏற்றுக்கொண்டால், நமது இரட்சிப்பைப் பற்றி நாம் நிச்சயமாக இருக்க முடியும்.

## முடிவுரை

தேவன் தமது சபைக்கு ஒரு வடிவமைப்பைக் கொண்டுள்ளார். அந்த வடிவமைப்பை நாம் எவ்வாறு கண்டறிகிறோம்? விசுவாச விஷயத்தில் தொடக்ககால சபையார் என்ன செய்யும்படி கேட்டுக் கொள்ளப்பட்டிருந்தனர் என்று வேதாகம ஆதாரத்தில் இருந்து நாம் தீர்மானித்த உடனே, அதே விஷயங்கள் இன்றையை நாட்களின் சபையாரிடத்திலும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். புதிய ஏற்பாட்டு நடைமுறைகள், அன்றிருந்த சபைக்குத் தேவனுடைய கட்டளைகளைப் பிரதிபலிப்பதால், அவைகள் இன்றிருக்கும் சபைக்கும் தேவனுடைய கட்டளைகளை வெளிப்படுத்துகின்றன.

---

குறிப்புகள்

[1]இவை இயேசு இந்த நினைவுச்சின்னத்தை ஏற்படுத்திய வேளை (காண்க மாற்கு 14:12-25; லூக்கா 22:7-20) மற்றும் பவுல் துரோவா நகரை விட்டுப் புறப்படுவதற்கு முன்னர் சகோதரர்களைச் சந்தித்த வேளை (நடபடிகள் 20:7-12) ஆகிய இரு நிகழ்வுகளாக இருந்தன. [2]கர்த்தருடைய சரீரத்தில், பிரிவினையை விதைப்பதும் பிரிவினைகளுக்குக் காரணமாவதும் பாவமாக உள்ளது. கிறிஸ்துவின் சரீரத்தினுடைய ஒரு சபைக்குழுமத்தில் கருத்து வேறுபாட்டின் விளைவாகப் பிரிவினை ஏற்படும்போது, யாரோ ஒருவர் பாவம் செய்துள்ளார் என்றாகிறது!